**கவனிக்க.**– *21.10.2010 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.**– *இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1678 - 2010 ඔක්තෝබර් මස 29 වැනි සිකුරාදා - 2010.10.29

*1678 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1508 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | – |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை – நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

*சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் சமுதாய அபிவிருத்தி அலுவலர் (உத்தியோகத்தர்) தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை*

சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் சமுதாய அபிவிருத்தி அலுவலர் (உத்தியோகத்தர்) தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகக் கீழ்க் காணப்படும் தகைமைகளுள்ள சப்பிரகமுவ மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஏழு ஆகும். ஆட்சேர்ப்புச் செய்யும் சந்தர்ப்பத்தில் இந்த எண்ணிக்கை கூடவோ குறையவோ இடம் உண்டு.

3. **விண்ணப்பிப்பதற்கு இருக்க வேண்டிய தகைமைகள்**.-

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த உடல், உள நலமும் மேம்பட்ட ஒழுக்க சீலமும் உடையவராய் இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருந்து சேவையில் நிரந்தரமாக்கப் பட்டவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.) ;

(iv) விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்பு அண்மித்த ஆறுவருட காலத்தினுள் குறைந்தது தொடர்ந்து மூன்று வருட காலங்கள் சப்பிரகமுவ மாகாண சபை நிருவாகப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாய்க் கொண்டவராய் இருத்தல் ;

(v) **கல்வித் தகைமை**.- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகள் உள்ளவர்களின் விண்ணப்பப்பத்திரங்களில் கூடிய கவனம் செலுத்தப்படும்:-

- (அ) அபிவிருத்திக் கல்வியில் இளமாணி, சமூக விஞ்ஞானம், புவியியல் அல்லது தொடர்பாடல் துறையில் பட்டம் பெற்றிருத்தல் ;
- (ஆ) சமுதாய அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய திறன்கள் ;
- (இ) தலைமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்புப் பற்றிய திறன்கள் ;
- (ஈ) சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் கூட்டங்களை நடாத்தும் திறன்கள்.

4. **சம்பளத்திட்டம்**.- ரூபா 16,720-10×320-11×365-15×450-ரூபா 30685 ஆகும்.

(அரசாங்க நிருவாக சுற்று நிருபம் இலக்கம் 6/2006 (iv) படி)

5. **விண்ணப்பிக்கும் முறைமையும் அது தொடர்பான தகவல்களும்**.- (i) இவ்வறிவித்தலின் பின்னால் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (செ.மீ. 21× 29) அளவுடைய தாளில் இருபக்கங்களையும் பாவித்துத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தில் இங்கு கீழ் 05 (V) இல் குறிப்பிடப்பட்டபடி தன்னுடைய கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்டு விண்ணப்பிக்க வேண்டும். முதலாம் பக்கத்தில் 01 இருந்து 11 வரையுள்ளவையும், மீதிப்பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப்பத்திரங்களைத் தயாரிக்க வேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2010.12.17 ஆகும். விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி "செயலாளர் மாகாண அரச சேவை ஆணைக்குழு, சப்பிரகமுவ மாகாண சபைக் கட்டடத் தொகுதி, புதிய நகரம், இரத்தினபுரி ஆகும். விண்ணப்பப்பத்திரங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டியதோடு அவை வைத்து அனுப்பப்படும் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் சமுதாய அபிவிருத்தி அலுவலர் பதவி என்று குறிப்பிடப்படவும் வேண்டும். அரச/மாகாண அரச சேவையில் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் விண்ணப்ப தாரியினால் அவருடைய விண்ணப்பப்பத்திரம் அவர் சேவை புரியும் திணைக்களத்தலைவர் ஊடாக விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்பட வேண்டும். அப்படித் தங்கள் திணைக்களத் தலைவர் ஊடாகச் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரத்துடன் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுத் தவிர வேறு ஒன்றும் இணைக்கப் படலாகாது.

(ii) சகல விண்ணப்பதாரிகளும் இதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணமாக ரூபா 300/- ஐச் சப்பிரகமுவ மாகாண சபையின் வருமானத் தலைப்பு 2003-90-01 இற்கு வரவு வைக்கப்படும் விதத்தில் சப்பிரகமுவ மாகாண சபை அமைச்சின் ஏதாவதொரு அலுவலகத்தில், திணைக்களத்தில் (உள்ளூராட்சி நிறுவனங்கள் தவிர்ந்த) அல்லது சப்பிரகமுவ மாகாணத்தினுள் அமைந்துள்ள ஏதாவதொரு பிரதேசச் செயலாளர் அலுவலகத்தில் கட்டணத்தைச் செலுத்தி அதற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

(iii) **பரீட்சை நடாத்தப்படும் மொழிமூலம்**.- பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதோடு, விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது.

(iv) **விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல்**.- விண்ணப்பப் பத்திரங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. அவற்றில் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்குப் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சை நடைபெறும் தினத்திற்கு ஏழு தினங்களுக்கு முன் பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்காத பரீட்சார்த்திகள்

கீழ்க் குறிப்பிடப்பட்ட விபரங்களுடன் சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுச் செயலாளருடன் தொடர்பு கொள்ள வேண்டும் :-

பரீட்சையின் பெயர் :-

விண்ணப்பதாரியின் பெயர் :-

பதிவு செய்த அஞ்சல் அலுவலகம் மற்றும் பதிவு இலக்கமும் திகதியும் :-

விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்பு கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்களும், பூரணமில்லாத விண்ணப்பப்பத்திரங்களும், உரிய முறைப்படி சப்பிரகமுவ மாகாண சபை வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கப்படும் விதத்தில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாமலோ அல்லது அப்படிச் செலுத்தப்பட்ட தற்கான பற்றுச்சீட்டை இணைத்தனுப்பாத விண்ணப்பப்பத்திரங்களும் உரிய தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பப்பத்திரங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரங்களை அனுப்புவதற்கு முன்பு இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் திகதிக்கு முன் தங்களால் பூரணப்படுத்தப்பட்டுள்ளன என்பது பற்றி விண்ணப்பதாரிகள் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளித்தல் தகைமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப் படலாகாது. கிடைக்கப்பெறும் விண்ணப்பப்பத்திரங்களின் தொகைக் கேற்ப பரீட்சை நிலையங்கள் தீர்மானிக்கப்படும்.

(V) **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**- விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்/சட்டத்தரணி/முப்படைகளில் அதிகாரம் பெற்றுள்ள அதிகாரிகள் அல்லது வருடமொன்றிற்கு ரூபா 2,30,700 இற்குக் குறையாத வருடாந்த ஒன்று திரட்டிய சம்பளம் பெறும் அரச/மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

6. **தெரிவு செய்யும் முறை.**-தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய பின்பு அப்பரீட்சையில் காட்டும் உயர் திறமையடிப்படையில் அரச சுற்று நிரூப இலக்கம் 15/90 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களின் சனத்தொகை விகிதாசாரப்படி உரிய மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களில் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்று அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்களில் திறமை அடிப்படையில் அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்குச் சமமான தொகையினர் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்கான நேர்முகப் பரீட்சையின் பின்பு தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்வதில் சிக்கல்கள் தோன்றுமிடத்து அதுபற்றி இறுதித் தீர்மானம் சப்பிரகமுவ மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும். இவ்விண்ணப்பங்கள் கோருவதன் மூலம் வெற்றிடங்கள் நிரப்புவது பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினைச் சார்ந்ததாகும்.

7. **எழுத்துப் பரீட்சை.**- எழுத்துப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால்/சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் நடாத்தப்படுவதோடு பரீட்சை ஒரு வினாத்தாளைக் கொண்டதாகவும் இருக்கும்.

01. உள்ளூராட்சி நிறுவனங்களின் சேவையும் மற்றும் சட்டபூர்வமான விதிகளும் காலம் 02 மணித்தியாலங்கள்.

(உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாகப் பிரதேச மக்களுக்கு நிறைவேற்றக்கூடிய சேவைகளும், அச்சேவைகளை நிறைவேற்றுவ தற்கான உரிய சட்டபூர்வ விதிகளும் (மாநகர சபை, நகரசபைக் கட்டளைச் சட்டங்கள், பிரதேச சபைச் சட்டங்களும், சேவைகளை நிறைவேற்று வதற்காக உபயோகிக்கக்கூடிய வேறு கட்டளைச் சட்டங்கள் சம்பந்தமாகவும், உள்ளூராட்சிக்குரிய சட்டங்களும், துணை விதிகள் பற்றிய அறிவும் எதிர்பார்க்கப்படும்.)

(வினாத்தாளுக்கான முழுப்புள்ளிகள் 100 என்பதோடு தகைமை பெறுவதற்கு (சித்தி பெறுவதற்கு) குறைந்தது நாற்பது (40) புள்ளிகளையோ அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளையோ பெற்றிருத்தல் வேண்டும்.

பரீட்சை நடாத்தப்படும்போது பரீட்சைக்குத் தோற்றுவதற்காகக் கிடைத்துள்ள பரீட்சை அனுமதி அட்டை மற்றும் விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேசிய அடையாள அட்டையையோ அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டையோ பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதே போல் பரீட்சை நடைபெறும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் மற்றும் நியமங்கள் நிபந்தனைகளை விண்ணப்பதாரிகள் பின்பற்ற வேண்டும்.

8. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.**- இப்பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதிய உரித்துடையனவும், நியமனம் பெறுநர் விதவைகள்/தபுதாரர்/அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். நியமனம் மூன்று வருட நன்னடத்தைக் காலத்தைக் கொண்டதுடன் அவர்கள் தாபனக் கோவை நிதிப்பிரமாணங்கள் திணைக்களச் சட்டதிட்டங்கள் ஒழுங்கு விதிகளையும் காலத்திற்குக் காலம் அரசு மற்றும் மாகாண அரச சேவை ஆணைக்குழு ஆகியவற்றினால் முன்வைக்கப்படும். சட்டதிட்டங்கள் கட்டளைகளுக்கும் கீழ்படிய வேண்டும்.

9. **வேறு காரணங்கள்.**- பரீட்சையை நடாத்திய பின் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்றுள்ள திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக அழைக்கப்படும்போது விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களையும், விசேடமாகத் தாம் விண்ணப்பித்துள்ள மாவட்டம், நிரந்தர வதிவிடம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகியவற்றைச் சமர்ப்பிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் பொய்யான தகவல் கொடுத்திருத்தல் பரீட்சார்த்தித் தகைமையை இரத்துச் செய்வதற்குக் காரணமாவதொடு நியமனம் வழங்கப்பட்ட பின்பு பொய்யான அல்லது தவறான தகவல்கள் வழங்கப்பட்ட விண்ணப்பதாரியாகக் காணப்படுமிடத்து சேவை யிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாக வேண்டி வரும். இவ்வறிவித்தலில் உள்ள ஒழுங்கு முறைகளுக்கு (சட்டதிட்டங்களுக்கு) உட்படாத ஏதாவது விடயங்கள் இருப்பின் அது பற்றித் தீர்மானம் எடுக்கும் உரிமை சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினைச் சார்ந்ததாகும்.

பந்துல ஏ. நாகசிங்க,
செயலாளர் (ப. க.),
மாகாண அரச சேவை ஆணைக்குழு,
சப்பிரகமுவ மாகாணம்.

மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகம்,
"சப்பிரகமுவ மாகாண மாகாண சபைக் கட்டடத் தொகுதி",
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2010.10.07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் சமுதாய அபிவிருத்தி அலுவலர் (உத்தியோகத்தர்) தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**

சுட்டெண் [ ]

(அலுவலக பாவனைக்காக)

01. முதலொழுத்துக்களுடன் பெயர் :-
   (i) ஆங்கிலத்தில் :-----.
   (ii) சிங்களத்தில்/ தமிழில் :-----.
02. முழுப்பெயர் :-
   (i) ஆங்கிலத்தில் :-----.
   (ii) சிங்களத்தில்/ தமிழில் :-----.
03. பரீட்சை அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி :-
   (i) ஆங்கிலத்தில் :-----.
   (ii) சிங்களத்தில்/ தமிழில் :-----.
04. நிரந்தர வதிவிடத் தகைமை பெற்றுள்ள மாவட்டம் :-----. [ ]
05. பால் (பெண் F/ஆண் M) :- [ ]
06. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :- (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) [ ]
07. பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாவட்டம் :-----. (இரத்தினபுரி /கேகாலை) [ ]
08. (i) பிறந்த திகதி :-----.
   (ii) 2010.12.17 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
09. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
10. கல்வித்தகைமை :
   I. (அ) பெற்றுள்ள பட்டமும் பாடங்களும் :-----.
   (ஆ) அச்சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :-----.
   (இ) பட்டம் பெற்றுள்ள பல்கலைக்கழகத்தின் பெயர் :-----.
   II. விண்ணப்பம் கோரும் அறிவுறுத்தலின் 03. (V) இன் கீழ் உள்ள தகைமைகள் இருப்பின் குறிப்பிடவும் :-----.
11. தங்களுடைய நிரந்தர வதிவிடமுள்ள மாவட்டத்திற்குரிய கீழ் குறிப்பிடப்படும் தகவல்களைத் தருக :
   (i) பிரதேசச் செயலாளர் பிரிவின் பெயர் :-----.
   (ii) 2010.12.17 ஆந் திகதிக்கு சப்பிரகமுவ மாகாண நிருவாகப் பிரதேசத்தினுள் நிரந்தரமாய் வசித்த காலம் :-----.
12. அரச சேவையில்/ அல்லது மாகாண அரச சேவையிலிருந்து ஏதாவது காரணத்தினால் விலகியோ விலக்கப்பட்டோ இருப்பின் வகித்த பதவி, சேவை புரிந்த திணைக்களம், மற்றும் விலக்கப் பட்டதற்கான காரணம் என்பவற்றைக் குறிப்பிடவும் :-----.
13. ஏதாவது குற்றத்திற்காக நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டுள்ளீரா? அப்படியாயின் விபரத்தைக் குறிப்பிடவும் :-----.
14. பரீட்சைக் கட்டணம் ரூபா 300 சப்பிரகமுவ மாகாண சபை வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கும் விதத்தில் செலுத்திய விபரம் :-

   அக்கட்டணம் செலுத்திய திகதி :-----.

   செலுத்திய அலுவலகம் :-----.

   அதற்காகக் கிடைத்த பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

(பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை இவ் விடத்தில் ஒட்டுதல் வேண்டும்.)

[ ]

இங்கு குறிப்பிடப்பட்ட விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக் கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையும் சரியானவையும் என வெளிப்படுத்துகின்றேன். ஆட்சேர்ப்புப் பரீட்சை பற்றிய நிபந்தனைகளின் படி என்னால் தவறான தகவல்கள் தரப்பட்டிருப் பின் பரீட்சைக்கு முன்போ, பின்போ எனது பரீட்சார்த்தித் தகைமை நிராகரிக்கப்படுவதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்பு வெளிப்படு மாயின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ யை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்றும் அவர் ................................. ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதி கூறுகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவியும் இலச்சினையும் :-----.
திகதி :-----.

அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையில் இருக்கும் விண்ணப்பதாரியாயின் -

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றுரை**

(i) இத்திணைக்களத்தில் ............... ஆந் திகதியிலிருந்து ............. பதவியில் சேவை புரியும் திரு./ திருமதி/ செல்வி ..................... விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி வரை பெறவேண்டிய சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்றும் எச்சரிக்கை தவிர்ந்த வேறு எவ்வித தண்டனைகளுக்கு உட்படவில்லை என்றும், விண்ணப்பப்பத்திரத்தில் கொடுக்கப் பட்டுள்ள விபரங்கள் சரியானவையும் உண்மையானவையும் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்கு அவர் தெரிவு செய்யப்படின் விண்ணப்பதாரி தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

-----,
திணைக்கள/ நிறுவனத் தலைவரின், அங்கீகாரம் பெற்ற உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
திகதி :-----.
(திணைக்களம்/நிறுவனம் (தயவ செய்து இலச்சினையை இடவும்.)

10 - 912

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.